8ஆம் ஆண்டு நினைவு நாள்!

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கடலூர், ஆக. 6-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதுசமயம் சம்பந்தபட்ட இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் எம். எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கரூர் மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர்.ஆக.6.

மக்கள் நல ஆட்சிக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, ஆகஸ்ட் 7ஆம் தேதி கரூர் மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வி.செந்தில்பாலாஜி எம். எல்.ஏ. கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற தமிழினத் தலைவர் கலைஞர். அவர்கள் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் மாவட்ட மாநில மாவட்ட மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளும் தங்களது பகுதிகளில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துதல், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம். மாணவ -மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்திட கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு. கிளை கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீனவர்களின் வருமானத்தை உயர்த்தவும்

மீன்வளத்தை பெருக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 6-

நாட்டில் மீன்வளத்தை உறுதி செய்யவும், மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:

உணவுப் பாதுகாப்பு, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் மீன்வளத்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்த போதிலும், கடல் மீன் இருப்பு குறைதல், அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பு, பருவநிலை மாற்றம், வாழ்விடச் சீரழிவு, கடல் மாசுபாடு, அழிவை ஏற்படுத்தும் மீன்பிடி முறைகள், அதிகரிக்கும் செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் பாரம்பரிய மீனவ சமூகங்களிடையே வாழ்வாதாரப் பாதுகாப்பின்மை ஆகியவற்றால் நாட்டின் மீன்வளத் துறை வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்கிறது என்பது குறித்த அறிக்கைகளை அரசு கவனத்தில் கொண்டுள்ளதா?

தற்போதைய சூழலுக்குக் காரணமான முக்கிய காரணிகள் குறித்த ஒன்றிய அரசின் மதிப்பீடு என்ன?

அறிவியல் பூர்வமான மீன்வள மேலாண்மை, மீன் இருப்பு மதிப்பீடு, வாழ்விட மறுசீரமைப்பு, கடல் பாதுகாப்பு மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் ஆகியவற்றை வலுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய உள்கட்டமைப்பு, காப்பீடு, மாற்று வாழ்வாதாரங்கள், நவீன மீன்பிடித் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாடு ஆகியவற்றின் மூலம் சிறு அளவிலான மீனவர்களுக்கு கூடுதல் ஆதரவை வழங்க அரசுமுன்மொழிந்துள்ளதா;

அவ்வாறாயின், அடுத்த ஐந்து ஆண்டுகளில் நிலையான மீன்வளத்தை உறுதி செய்யவும், மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும் அரசு நிர்ணயித்துள்ள இலக்கு என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லலன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

ICAR மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ICAR CMFRI) வெளியிட்ட 'இந்தியாவின் கடல் மீன் இருப்பு நிலை (2022)' அறிக்கையின்படி, இந்தியக் கடல் பகுதிகளில் மீன் இருப்பு நல்ல நிலையில் உள்ளது; இந்திய பிரத்யேக பொருளாதார மண்டலத்தின் (EEZ) பல்வேறு பகுதிகளில் மதிப்பிடப்பட்ட 135 மீன் இருப்பு வகைகளில் 91.1% நிலையான அளவுகளில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ICAR CMFRI இன் புள்ளிவிவர ரீதியாக சரிபார்க்கப்பட்ட அறிவியல் மாதிரித் திட்டத்தின் அடிப்படையிலும், சராசரி ஆண்டு வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படையிலும் 20142023 காலகட்டத்திற்கான இந்தியாவின் கடல் மீன் பிடிப்பு விவரங்களை ஆய்வு செய்ததில், கடல் மீன் உற்பத்தியில் தொடர்ச்சியான சரிவுக்கான எந்த ஆதாரமும் இல்லை; மாறாக, ஒட்டுமொத்தமாக நிலையான போக்குடன் கூடிய சிறிய அளவிலான அதிகரிப்பு காணப்படுகிறது.

மேலும், ICAR CMFRI தனது ஆராய்ச்சி மையங்கள் மற்றும் கடலோர மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் உள்ள கள நிலையங்கள் மூலம் மீன்பிடிப்பு விவரங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், வணிக ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் முக்கியமான மீன்வளங்களின் உயிரியல் செயல்பாடுகள் குறித்துக் கவனம் செலுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் ICAR தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் நிகழ்நேரக் (realtime) கணக்கெடுப்புகள் மூலம் கடலோரச் சூழல் மண்டலத்தின் ஆரோக்கியத்தையும் கண்காணிக்கிறது. இதேபோன்று, இந்திய மீன்வளக் கணக்கெடுப்பு நிறுவனம் (FSI), இந்தியாவின் பிரத்யேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) முறையான ஆய்வுக் கணக்கெடுப்புகளை மேற்கொண்டு கடல்சார் மீன்வள வளங்களின் நிலையை கண்காணிக்கிறது. மீன்பிடி அழுத்தம், காலநிலை மாறுபாடு, கடல் மாசுபாடு மற்றும் வாழ்விடச் சீரழிவு ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதற்குத் தேவையான, கடலடி மற்றும் ஆழ்கடல் மீன் இனங்களின் பரவல், எண்ணிக்கை மற்றும் உயிரியல் பண்புகள் குறித்த அடிப்படைத் தரவுகளை இந்நிறுவனம் உருவாக்குகிறது.

ஒன்றிய அரசின் மீன்வளத் துறை, அறிவியல் பூர்வமான மீன்வள மேலாண்மை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் சிறு அளவிலான மீனவர்களின் நலன் ஆகியவற்றை வலுப்படுத்த விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2015ஆம் ஆண்டு முதல், 'நீலப் புரட்சித் திட்டம்' (Blue Revolution Scheme), 'மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி' (FIDF), 'பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா' (PMMSY) மற்றும் 'பிரதான் மத்ஸ்ய கிசான் சம்ரித்தி சஹ் யோஜனா' (PM MKSSY) போன்ற முக்கியத் திட்டங்கள் மூலம் 39,272 கோடி நிதியை ஒதுக்கி, இத்துறையில் முதலீட்டை அரசு கணிசமாக அதிகரித்துள்ளது.

PMMSY திட்டத்தின் கீழ், மீன் இருப்புகளைப் புத்துயிர் பெறச் செய்வதற்கும் கடல்சார் வாழ்விடங்களை மீட்டெடுப்பதற்கும் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் செயல்படுத்தப்படுகின்றன. இதில் விரிவான கடல் பண்ணைத் திட்டங்கள், செயற்கைப் பவளப்பாறைகளை நிறுவுதல், மற்றும் கடல் ஆமைகளைப் பாதுகாப்பதற்காக இழுவலைகளில் ஆமை விலக்கும் கருவிகளை (TEDs) பொருத்துதல் ஆகியவை அடங்கும். நீடித்த மீன்வளத்தை உறுதி செய்வதற்கும், சிறு மீனவர்கள் தங்கள் வருமானத்தை கணிசமாக அதிகரிக்க உதவுவதற்கும், துறையின் திட்டங்கள் வாழ்வாதாரப் பன்முகப்படுத்தலுக்கும், அளவுக்கு அதிகமாகச் சுரண்டப்படும் கடலோர நீர்நிலைகளில் மீன்பிடி அழுத்தத்தைக் குறைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கின்றன.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

கழக இளைஞரணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சித் தலைவர், தெற்கு பகுதிச் செயலாளர் நா.இராமலிங்கம் தலைமையில் பூந்தமல்லி நெடுஞ்சாலை அண்ணா ஆர்ச் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், முன்னாள் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஆக. 6-

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணியின் அறிக்கை வருமாறு:-

நவீன தமிழகத்தை கட்டமைத்த சிற்பி, இனம் - மொழி காக்க இறுதி மூச்சு வரை உழைத்திட்ட தமிழர்களின் தகைசால் தலைவர், தமிழர் தம் நெஞ்சங்களில் நிரந்தரமாக வாழ்ந்துகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. சார்பில் வரும் 07 - 08 - 2026 (வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணிக்கு அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை (முண்டியம்பாக்கம்) எதிரில் இருந்து மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் அமைதி ஊர்வலம் புறப்பட்டு, சிந்தாமணி கிராமத்தில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் மாநில - மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என விழுப்புரம் (தெற்கு) மாவட்ட கழகத்தின் அனைத்து நிலை கழகத் தோழர்களும் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்

தலைவர் கலைஞர் புகழ் ஓங்கட்டும்!

தரணி உள்ளவரை நிலைக்கட்டும்!!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்டு 7 – தலைவர் கலைஞர் அவர்களின்

8-வது நினைவு நாளில் அனைவரும் புகழஞ்சலி செலுத்துவோம்!

நீலகிரி மாவட்ட கழகத்தினருக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

நீலகிரி, ஆக. 6-

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்திய அரசியலில் மூத்த தலைவராக இருந்து பல்வேறு சூழ்நிலைகளில் பல குடியரசு தலைவர்கள் மற்றும் பிரதமர்களையும் உருவாக்கி, இந்திய அரசியலில் சமூக நீதியை காப்பதில் முதன்மையாக திகழ்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை 2021-2026 வரை முதல்வராக இருந்து திகழவைத்த மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நமக்கு தந்தவர்.

ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராக இருந்ததோடு, தொடர்ந்து இந்திய அரசியல் வரலாற்றில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிக்கண்டு, தமிழகம் அனைத்து துறைகளிலும் இன்றும் சிறப்பு பெற்றிட அடித்தளமாக திகழ்ந்து, நவீன தமிழகத்தின் தந்தை என அனைவராலும் போற்றப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேரறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அவர்களின் 8-வது நினைவுநாளில் புகழஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர், மாண்புமிகு தளபதி அவர்களின் வழிகாட்டுதல்படி, நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் கலைஞர் அய்யா அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்து மலர் அஞ்சலி செலுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

அதன்படி, ஆகஸ்டு 7-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்டத்திலுள்ள அனைத்து நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழகங்களிலும் அய்யா தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படங்களை அலங்கரித்து வைத்து நம் இதய தலைவர் அவர்களுக்கு நம் மரியாதையை செலுத்திட வேண்டுவதோடு, நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற தேவையான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் - கிளை கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்து உதவிட அன்புடன் வேண்டுகிறேன். இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு எம். எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் - தலைவர் கலைஞரின்

8வது ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டின் நினைவு நாளையொட்டி நாளை (7.8.2026) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணியில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தினர் திரளாகப் பங்கேற்குமாறு சங்கப் பொதுச் செயலாளர் த. ஆறுமுகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

உலகத் தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்றத் தலைவர்!தமிழ்நாட்டின் தலையாய அரசியல் அகராதி!இந்திய அரசியலின் இணையற்றதவிர்க்க இயலாச் சக்தி! முக்கால் நூற்றாண்டு பொதுவாழ்வுப் போராளி! இனமானசுயமரியாதைச் சுடரொளி!தன் வாழ்நாளை தன் தமிழ் சமூகத்திற்காக எழுத்தாளராக கவிஞராக பத்திரிகையாளராகநாடக நடிகராகதிரைக்கதை ஆசிரியராகவசனகர்த்தாவாக தந்தை பெரியாரின் பிள்ளையாக பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக பொதுவாழ்வில் 13 முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக அய்ந்து முறை முதலமைச்சராக ஓயாது உழைத்தவர்!வரலாற்றுச் சாதனைகள் நிகழ்த்தியவர்!குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம்,

பொது மக்களுக்காக பேருந்துச் சேவைகள் நிறைவேற்றியவர்!அதற்காக வேப் பலப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கிச் செம்மைப்படுத்தியவர்! அப்போக்குவரத்துக் கழகங்களில் இலட்சக்கணக்கில் பணியாற்றும் பணியாளர்களாகிய நமது வாழ்வாதாரத்திற்கு வழிகோலியவர்! பென்சன் திட்டம் வகுத்து வாழ்வளித்தவர்! போக்குவரத்துத் தொழிலாளர்களின் குடும்பத் தலைவர்!அமரர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி! 07.08.2026 அன்று காலை 8.00 மணிக்கு, சென்னை அண்ணா சாலைஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ளகலைஞர்திருவுருவச் சிலை முன்பிருந்து, கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் துவங்கி,கலைஞர் நினைவிடம் வரை நடைபெற உள்ளது.அவ்வமயம்,சென்னையில் உள்ள அனைத்துப் பணிமனை நிர்வாகிகள் மற்றும் சங்க முன்னோடிகள் அனைவரும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.